21.09.2017

தினமலர்

## விவசாயிகளின் வருவாய் உயர்த்த திட்டம் : தமிழகத்திற்கு முக்கியத்துவம்



விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்காக அதிகரிக்கும் திட்டத்தில் , தமிழகத்தையும், மத்திய அரசு சேர்த்துள்ளது வறட்சி ., வெள்ளம், புயல் உள்ளிட்ட இயற்கை காரணங்களால் , நாடு முழுவதும் வேளாண் தொழில் பாதிக்கப்பட்டு , விவசாயிகள் நஷ்டத்திற்கு ஆளாகின்றனர் கடன் பிரச்னை ., மகசூல் குறைவு உள்ளிட்ட காரணங்களால், விவசாயிகள் தற்கொலை செய்வது, அதிர்ச்சியில் இறக்கும் சம்பவங்கள், நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளன .

இதற்கு தீர்வு காணும் வகையில் , விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்காக அதிகரிக்கும் திட்டத்தை, மத்திய அரசு செயல்படுத்த உள்ளது இதன்படி ., 2022க்குள், விவசாயிகளின் வருவாய் இரு மடங்காக உயரும் என , எதிர்பார்க்கப்படுகிறது . இத்திட்டத்தில், தமிழகத்திற்கு, மத்திய அரசு முக்கியத்துவம் அளித்துள்ளது .

இது குறித்து , தமிழக வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது இந்தாண்டு :, அசாம், பீஹார், ஜார்க்கண்ட், ம.பி., மஹாராஷ்டிரா, ராஜஸ்தான், தமிழகம், உ.பி., மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் , விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்காக அதிகரிக்கும் திட்டம் , செயல்படுத்தப்பட உள்ளது பிரதமர் பெயரிலான ., பல்வேறு வேளாண் மேம்பாட்டு திட்டங்களும் செயல்படுத்தப்படும் இதற்காக ., ஒவ்வொரு

மாநிலத்திற்கும், பல கோடி ரூபாய் செலவிடப்பட உள்ளது தென் மாநிலங்களில் ., தமிழகம் மட்டுமே இத்திட்டத்தில் இடம் பெற்று உள்ளது மத்திய அரசு ., தமிழக விவசாயிகள் மீது அதிக அக்கறை காட்டுவதையே இது காட்டுகிறது இவ்வாறு அவர். .கூறினார்

- நமது நிருபர் –

தினமணி

## தமிழகத்தில் 20 ஆண்டுகளில் விவசாயத்துக்கு தண்ணீர் கிடைக்காது: வேளாண் பல்கலைக்கழக நீரியல் தொழில்நுட்ப மைய இயக்குநர் எச்சரிக்கை



தமிழகத்தில் நீர்நிலை பராமரிப்பில் கவனம் செலுத்தாவிட்டால் , அடுத்த 20 ஆண்டுகளில் விவசாயத்துக்கு தண்ணீர் கிடைக்காமல் போகும் அபாயம் உண்டு என்று, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக நீரியல் தொழில்நுட்ப மைய இயக்குநர் பி.ஜே. பாண்டியன் எச்சரித்துள்ளார்.

மதுரையில் தானம் அறக்கட்டளை சார்பில் , வளம் குன்றா மீள்திறன் கூடல் அரங்கு-2017 நிகழ்ச்சி தமுக்கம் மைதானத்தில் செவ்வாய்க்கிழமை தொடங்கியது. 4 நாள்கள் நடைபெற உள்ள இந் நிகழ்ச்சியின் தொடக்க விழாவுக்கு , தானம் அறக்கட்டளை நிர்வாகி பி.டி. பங்கேரா தலைமை வகித்தார். முன்னதாக , டாடா-தானம் அறக்கட்டளை இயக்குநர் ஏ. குருநாதன் வரவேற்றார்.

இதில், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக நீரியல் தொழில்நுட்ப மைய இயக்குநர் பி.ஜே. பாண்டியன் பேசியதாவது:
தமிழகத்தில் 17 ஆறுகள், 40 ஆயிரம் ஏரி , குளம் உள்ளிட்ட நீர்நிலைகள் , 35 லட்சத்துக்கும் மேற்பட்ட கிணறுகள் உள்ளன. ஆனால் கடந்த 50 ஆண்டுகளாக இவற்றை பராமரிக்காததன் விளைவாக நீர்நிலைகளில் தண்ணீர் கொள்ளளவு 50 சதவீதம் குறைந்துள்ளது. 35 லட்சம் கிணறுகள் இருந்தாலும் அதில் தண்ணீர் இல்லை. இதற்குக் காரணம் நீர்நிலைகளில் தொடர்ந்து தண்ணீரை உறிஞ்சிய நாம் , அதற்கு தண்ணீர் வரத்து, மறுஊட்டம் பற்றி யோசிக்கவில்லை. இதுவே வறட்சிக்கும் காரணம்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட வரலாறு காணாத வறட்சியால் அரசு விழித்துக்கொண்டு தற்போது குடிமராமத்து முறை மூலம் நீர்நிலைகளில் தூர்வாரும் பணிகளைத் தொடங்கி உள்ளது.

தற்போதுள்ள சூழலில் வறட்சியில் இருந்து மீளவேண்டுமானால் , நீர்நிலைகள், வரத்துக் கால்வாய்கள் பற்றிய விழிப்புணர்வு கிராம மக்களுக்கு அதிகம் தேவை. தற்போது நமக்கு கிடைக்கும் தண்ணீரில் 80 சதவீதம் வேளாண்மைத் துறைக்கு வழங்கப்படுகிறது. எதிர்காலத்தில் வேளாண்மைக்கு தண்ணீர் கிடைக்காத சூழல் ஏற்படும் அபாயமும் உள்ளது. எனவே , தண்ணீர் சிக்கன வேளாண்மையை விவசாயிகள் பயன்படுத்தவேண்டும்.

தண்ணீரை குறைவாகப் பயன்படுத்தி மகசூலை அதிகரிக்கும் சொட்டு நீர்ப்பாசன முறையை கையாளலாம். மழையை மட்டுமே நம்பி உள்ள மானாவாரி மகசூல் முறையில் விவசாயிகள் மழை நீர் சேகரிப்பை கையாள வேண்டும் என்றார்.

மாவட்ட ஆட்சியர் கொ. வீரராகவராவ்: மதுரையில் வைகை நதியை பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆற்றின் எல்லைகளை வரையறுத்து , ஆக்கிரமிப்புகளை அகற்றுவது. ஆற்றில் கழிவுநீர் கலப்பதை தடுத்து நிறுத்துவது. குப்பைகளை கொட்டுவதை தடுப்பது. கல்லூரி , பள்ளி மாணவர்களைப் பயன்படுத்தி ஆற்றை சுத்தம் செய்வது. ஆற்றின் கரைகளில் மரம் நட்டு பாதுகாப்பது. மழை நீர்

சேகரிப்பு அமைப்பை உருவாக்கி , நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவது என்பன உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வைகையை பாதுகாக்கும் பணியில் மகளிர் சுய உதவிக்குழுவினரும் இணைய வேண்டும்.

பல்லவன் கிராம வங்கித் தலைவர் எஸ். சுரேஷ்குமார்: 3 கிராம வங்கிகளை இணைத்து பல்லவன் கிராம வங்கி உருவாக்கப்பட்டது.

முற்றிலும் கிராமப்புற மக்களுக்கான சேவைகளை பல்லவன் வங்கி வழங்கி வருகிறது. கிராமப்புற மக்களுக்கு கடன் உதவி, வேளாண் கடன், வீட்டுக்கடன் உள்ளிட்டவற்றை வழங்கி வருகிறது. ரூ. 450 கோடியில் தொடங்கப்பட்ட வங்கியின் ஆண்டு வணிகம் தற்போது ரூ.7,500 கோடியாக உள்ளது.

நாட்டில் வங்கித் துறையில் வராக்கடன் தற்போது பெரும் பிரச்னையாக உருவெடுத்துள்ளது. ஆனால் , பல்லவன் வங்கியின் வராக்கடன் 2 சதவீதம் மட்டுமே உள்ளது. ஏழை மக்களுக்கு கடன் கொடுத்தால் அதை நேர்மையாக திருப்பிச் செலுத்துவார்கள் என்பதற்கு பல்லவன் வங்கி உதாரணமாக உள்ளது என்றார்.

நிகழ்ச்சியில், ஆயுள் காப்பீட்டு நிறுவன மண்டல முதுநிலை மேலாளர் பி.ஜே. நிக்கல்சன், இயற்கை வளங்கள் மேலாண்மை நிறுவன இயக்குநர் ராஜீவ் அகால் , நெதர்லாந்து நாட்டை ச் சேர்ந்த குறுநிதி நிபுணர் அன்னெட் ஹூட்காமர் , தானம் அறக்கட்டளை நிறுவனத் தலைவர் வாசிமலை உள்ளிட்ட பலர் பேசினர்.

கூடல் அரங்கில் , தமிழகம் முழுவதும் மற்றும் ஆந்திரம் , தெலங்கானா, கர்நாடகம், ஒடிசா, மகாராஷ்டிரா உள்பட வெளி மாநிலங்களிலிருந்தும் ஏராளமான பெண்கள் பங்கேற்றனர்.

## ஓரிரு இடங்களில் மழை வாய்ப்பு

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. தென்மேற்கு பருவமழை நிறைவடையும் காலம் நெருங்கி வருவதால் , தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களில் மழையின் அளவு குறையும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதேசமயம் , தமிழகத்தில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக அதிகாரிகள் கூறியது: வெப்பச்சலனத்தின் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஆங்காங்கே ஓரிரு இடங்களில் மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக்கூடும். சென்னையில் மாலை அல்லது இரவு நேரங்களில் மழைக்கு வாய்ப்புள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

**புதன்கிழமை பதிவான மழை நிலவரம்(மி.மீட்டரில்):** நீலகிரி மாவட்டம் தேவாலா , கூடலூர் பஜார் - 80, நடுவட்டம் - 40, கன்னியாகுமரி மாவட்டம் பூபதிபாண்டி , கோவை மாவட்டம் சின்னக்கல்லாறு - 20, பேச்சிப்பாறை, நாகர்கோவில், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம் - 10.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 78.10 அடி



மேட்டூர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை காலை 78.10 அடியாக உயர்ந்தது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 5,553 கன அடியாகச் சரிந்தது. அணையிலிருந்து நொடிக்கு 2,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. அணையின் நீர் இருப்பு 40.08 டி.எம்.சி.யாக இருந்தது. மேட்டூர் அணையின் நீர் இருப்பு 53 டி.எம்.சி.யாக உயர்ந்ததால் , காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வாய்ப்பு உள்ளது என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பெரியாறு அணையில் இருந்து விநாடிக்கு 1,400 கன அடி தண்ணீர் திறப்பு



முல்லைப் பெரியாறு அணை நீர்பிடிப்பில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் புதன்கிழமை அணையில் இருந்து தமிழகப் பகுதிக்கு விநாடிக்கு 1,400 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. முல்லைப் பெரியாறு அணை நீர்ப்பிடிப்பில் புதன்கிழமை 3.6 மி.மீட்டரும், தேக்கடியில் 2 மி.மீட்டரும் மழை பதிவாகியுள்ளது. அணைக்கு தொடர்ந்து தண்ணீர் வரத்து உள்ளதால் , கடந்த 18 ஆம் தேதி (திங்கள்கிழமை) அணையில் இருந்து லோயர்கேம்ப் மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்திக்கு கூடுதலாக விநாடிக்கு 999 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. இந்நிலையில், புதன்கிழமை பெரியாறு அணையில் இருந்து தமிழகப் பகுதிக்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவை மேலும் அதிகரித்து , விநாடிக்கு 1,400 கன அடி வீதம் திறக்கப்பட்டுள்ளது. இதனிடையே அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 2,156 கன அடியாக இருந்தது. அணையின் நீர்மட்டம் 127.40 அடியாகவும், நீர் இருப்பு 4,134 மில்லியன் கன அடியாகவும் உள்ளது.

## நிலக்கடலை மகசூல் அதிகரிக்க...



கோபி: நிலக்கடலையில் அமோக மகசூல் பெற ஜிப்சம் இட வேண்டும் என கோபி வேளாண்மை அலுவலர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து கோபி வேளாண்மை உதவி இயக்குநர் அ.நே.ஆசைத்தம்பி கூறியதாவது: நிலக்கடலை உற்பத்தியில் இந்தியா இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. இது , தாவர எண்ணெய் உற்பத்தியில் முக்கிய இடம் பெறுவதோடு , நல்ல தரம் வாய்ந்த புரதம் , தேவையான அளவு சத்துகள் அடங்கிய உணவுப் பொருளாகவும் விளங்குகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த நிலக்கடலைப் பயிரை சாகுபடி செய்யும்போது அதன் மகசூலை அதிகரிப்பதற்கு ஜிப்சம் உரம் மிகவும் பயன்படுகிறது. ஜிப்சம் உரத்தின் ரசாயனப் பெயர் கால்சியம் சல்பேடி எனப்படுகிறது. இதில் , கால்சியம் (சுண்ணாம்புச் சத்து) 23 சதவீதம் வரையிலும், சல்பர் (கந்தகச்சத்து) 18 சதவீதம் வரையிலும் உள்ளது. நிலக்கடலை உள்ளிட்ட எண்ணெய், புரதப் பயிர்கள் அனைத்துக்கும் ஜிப்சம் அவசியம் இட வேண்டும். ஏனெனில் , இந்தப் பயிர்களுக்கு மிகவும் அவசியமான கந்தகச் சத்து ஜிப்சத்தில்தான் அதிக அளவிலும் , குறைந்த விலையிலும் கிடைக்கிறது. தமிழகத்தில் அனைத்துப் பகுதி மண் வகைகளிலும் கந்தகச்சத்து குறைபாடு காணப்படுகிறது.

இதன் காரணமாக விளைச்சல் குறைவதுடன் , எண்ணெயின் அளவும் குறைகிறது. பயிர் வளர்ச்சி குன்றி வேர் முடிச்சுகள் பாதிப்படைவதால் தழைச்சத்தை நிலை நிறுத்துவதும் பாதிக்கப்படுகிறது. ஜிப்சம் இடுவதால் இந்தக் குறைபாடுகள் நீக்கப்படுகின்றன. மேலும் , ஜிப்சம் இடுவதால் மண் இறுக்கம் குறைந்து நிலக்கடலையின் பருமன் ஒரே சீராகவும் , திரட்சியாகவும் ஆகிறது.

நிலக்கடலைப் பருப்பு விதைக்கும்போது , ஏக்கருக்கு 80 கிலோவும், விதைத்த 45-ஆவது நாளில் களை வெட்டி மண் அணைக்கும்போது , ஏக்கருக்கு 80 கிலோவும் ஆக இரண்டு முறை மொத்தம் 160 கிலோ ஜிப்சம் இட வேண்டும். நிலக்கடலை மட்டுமல்லாது களர் மண் நிலங்களின் பயிர் மகசூலைக் கூட்டவும் ஜிப்சம் அற்புதமாகச் செயல்படுகிறது. களி மண் அடர் தன்மையைக் கூட இலகுவாக்கி வேர் வளர்ச்சிக்கு ஜிப்சம் துணை புரிகிறது. மண்ணின் நீர்ப்பிடிப்புத் தன்மையை அதிகமாக்குகிறது. மேலும் , நெல், கரும்பு உள்ளிட்ட பல்வேறு பயிர் சாகுபடியின் போதும் ஜிப்சம் இட்டு நிலத்தை மேம்படுத்தலாம் என தெரிவித்தார்.

## பூச்சி, நோய் கண்காணிப்பு, கட்டுப்பாட்டு முறைகள்



கோவை: தமிழக விவசாயிகளுக்கு செப்டம்பர் மாதத்துக்கான பூச்சி , நோய் கண்காணிப்பு, கட்டுப்பாட்டு முறைகள் குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது. தமிழகத்தில் தற்போது பூச்சி , நோய்களின் தாக்கமானது பொருளாதார சேத நிலைக்குக் குறைவாகவே உள்ளது. எனவே , விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் உள்ள பூச்சி , நோய்களின் தாக்குதல் அறிகுறிகளை விளக்குப் பொறி , மஞ்சள் ஒட்டும்பொறி , இனக் கவர்ச்சிப் பொறிகளை வைத்துக் கண்காணிக்க வேண்டும்.

### நெற்பயிர்

நாற்றங்காலில் ( 20 சென்டுக்கு) இலைப்பேன் தாக்குதலைக் கட்டுப்படுத்த பாஸ்போமிடான் 40 எஸ்.எல். 50 மில்லியை 20 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும்.

நெல்லில் இலைச்சுருட்டுப் புழு , தண்டுத் துளைப்பான் தாக்குதலைக் கண்டறிந்து கட்டுப்படுத்துவதற்கு வயல்களில் விளக்குப் பொறி (ஏக்கருக்கு 1வீதம்) வைக்க வேண்டும்.

தேவைப்பட்டால் வேப்பங் கொட்டைச் சாறு 5 சதம், ஹெக்டேருக்கு 25 கிலோ அல்லது குளோர்பைரிபாஸ் 1,250 மில்லி அல்லது கார்டாப் ஹெக்டேருக்கு 1,000 கிராம் வீதம் பயிர்களில் தெளிக்க வேண்டும்.

தற்பொழுது காலநிலை மேகமூட்டத்துடனும் , அடிக்கடி மழை பெய்தும் வருவதால் பாக்டீரியா இலைக் கருகல் , குலை நோய் தாக்கும் வாய்ப்புள்ளது. எனவே , விவசாயிகள் இவ்விரு நோய்கள் தென்படுவதைக் கண்காணிக்க வேண்டும்.

தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் நெற்பயிர்களில் இலைப்புள்ளி நோயின் தாக்குதல் தென்படுகிறது. எனவே , விவசாயிகள் குறிப்பாக இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகள் நாற்றங்கால், நடவு நட்ட வயல்களில் மான்கோசோப் 1 லிட்டர் நீருக்கு 2 கிராம் தேவைக்கு ஏற்ப 2 அல்லது 3 முறை 10-15 நாள்கள் இடைவெளியில் நோயின் தாக்கத்துக்கு ஏற்ப தெளிக்கவும்.

**கரும்பு**

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி பகுதிகளில் கரும்பு பயிரில் நுனிக் குருத்துப் புழு , இடைக் கணு புழு சேதம் கண்டறியப்பட்டுள்ளன. இந்தச் சேதத்தைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட மேலாண்மை முறைகளைக் கையாள வேண்டும்.

1. நன்கு விளைந்த , நுனிக்குருத்துப் புழு , இடைக்கணு புழு தங்கிய கரும்பை முன்னுரிமை அடிப்படையில் அறுவடை செய்து அரவைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

2. தாக்கப்பட்ட கரும்புகளை உடனடியாக அறுவடை செய்ய வேண்டும். இதன் மூலம் பூச்சிகள் மேலும் பெருகுவதையும் , மற்ற இளம் பயிர்களுக்குப் பரவுதலையும் கட்டுப்படுத்தலாம்.

3. நுனிக் குருத்துப் புழு , இடைக்கணு புழு பூச்சிகளைத் தொடர்ந்து கண்காணிக்க இனக்கவர்ச்சிப் பொறிகளை ஒரு ஹெக்டேருக்கு 20 வீதம் வைக்க வேண்டும்.

4. ட்ரைக்கோகிராமா கைலோனிஸ் 2.5 சி.சி. (ம) டிரைக்கோகிரமா ஜப்பானிக்கம் என்ற முட்டை ஒட்டுண்ணிகளை வாரம் ஒரு முறை வைப்பதால் துளைப்பான்களின் தாக்கம் குறையும்.

5. நீர் தேக்கம் இல்லாதவாறு நிலத்தைப் பராமரிக்க வேண்டும்.

6. காய்ந்த கரும்பு சோகைகளை நட்ட பின் 5, 7 மாதங்களில் நீக்க வேண்டும்.

7. விட்டம் கட்டுவதை செயல்படுத்துவதால் ஒட்டுமொத்த துளைப்பான் தாக்குதலில் இருந்து பாதுகாக்கலாம்.

தினகரன்

## விவசாய ஆர்வலர் குழு கூட்டம்

வானூர் வானூர் தாலுகா தைலாபுரம் கிராமத்தில் வேளாண்மைதுறை சார்பில் :
வட்டார வேளாண்மை உதவி . விவசாய ஆர்வலர்கள் குழுக்களின் கூட்டம் நடந்தது
வேளாண் வணிகம் மற்றும் . இயக்குனர் ஜெகநாதன் தலைமை தாங்கினார்
விற்பனைத்துறை துணை இயக்குனர் தனசேகர் கலந்துகொண்டு விவசாய ஆர்வலர
குழுக்கள் அமைத்து செயல்படுவதற்கான நோக்கம் குறித்து பேசினார் விவசாய .
ஆர்வலர் குழுக்கள் ஒன்றிணைந்து செயல்படுவதால் சாகுபடி மேற்கொள்ளும் போது
தங்களுக்கு தேவையான இடுபொருட்கள் மொத்த விலையில் உற்பத்தி செலவினை
குழுக்கள் . கணிசமாக குறைக்க முடியும் என்றும் கூறினார் ஒருங்கிணைந்து
மாதந்தோறும் கூட்டம் நடத்தி தீர்மானங்களை பதிவேடுகளில் பதிவு செய்து
பராமரிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார் வானூர் வட்டார வேளாண்மை .

அலுவலர் ரேவதி, வேளாண்மை அலுவலர்கள் ஜானகிராமன் , சரவணன் ஆகியோர் கலந்துகொண்டனர் உதவி வேளாண்மை அலுவலர்கள் ., ஆத்மா மற்றும் பயிர்பரிசோதனை அலுவலர்கள் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர் .

இதேபோல் கிளாப்பாக்கம் மற்றும் கோரைக்கேணி கிராமங்களிலும் விவசாய .ஆர்வலர்கள் குழு ஆலோசனை கூட்டம் நடந்தது

## விவசாயிகளுக்கு மதிப்பு கூட்டல் பயிற்சி

சின்னசேலம்: கல்வராயன்மலையில் உள்ள கரியாலூரில் அட்மா திட்டம் மூலம் நடந்த மாவட்ட அளவிலான பயிற்சியில் நிறுவன அடிப்படையிலான மதிப்பு கூட்டல் பயிற்சி அளிக்கப்பட்டது இதில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்ந்த . உதவி வேளாண்மை அலுவலர் பரசுராமன் மலையில் அதிகளவு விளையும் மரவள்ளி, தினை, சாமை, வரகு போன்ற விளைபொருளை நேரடியாக விற்பனை செய்தால் குறைவான லாபம் கிடைக்கும்.

அதனால் மரவள்ளி போன்ற பொருளை அதன் மதிப்பு கூட்டு பொருளான சிப்ஸ் , பிஸ்ெகட், சேமியா, மாவு வகைகளாக தயார் செய்து விற்றால் அதிகளவு லாபம் கிடைக்கும் என்றும் , அதற்கான சந்தை வாய்ப்புகள் குறித்தும் விவசாயிகளிடம் விளக்கமாக பேசினார்மேலும் சின்னசேலம் வட்டார அட்மா தொழில் நுட்ப மேலாளர் . . சாமுண்டீஸ்வரி கருத்துக் கண்காட்சி குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார் இதில் கல்வராயன்மலையை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர் பயிற்சிக்கான . ஏற்பாடுகளைஉதவி தொழில் நுட்ப மேலாளர் சக்திவேல் , செல்வராஜ் ஆகியோர் செய்திருந்தனர் .